www.Padasalai.Net www.Trb Tnpsc.Com

T

# அரையாண்டுப் பொதுத் தேர்வு - 2024

## ஒன்பதாம் வகுப்பு

நேரம்: 3.00 மணி சமூக அறிவியல் மதிப்பெண்கள்: 100

### பகுதி - I

சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்:- 14×1=14

1) ஹரப்பா மக்கள் ______ பற்றி அறிந்திருக்கவில்லை
அ) தங்கம் மற்றும் யானை ஆ) குதிரை மற்றும் இரும்பு
இ) ஆடு மற்றும் வெள்ளி ஈ) எருது மற்றும் பிளாட்டினம்

2) மகாவீரரின் போதனைகளால் ஈர்க்கப்பட்ட மகத அரசர் ______
அ) தனநந்தர் ஆ) சந்திரகுப்தர் இ) பிம்பிசாரர் ஈ) சிசுநாகர்

3) பெலப்பொனேசியப் போர் ______ மற்றும் ______ ஆகியோர்களுக்கிடையே நடைபெற்றது
அ) கிரேக்கர்கள் மற்றும் பாரசீகர்கள் ஆ) பிளேபியன்கள் மற்றும் பெட்ரீசியன்கள்
இ) ஸ்பார்ட்டா மற்றும் ஏதென்ஸ் நகரவாசிகள் ஈ) கிரேக்கர்கள் மற்றும் ரோமானியர்கள்

4) ______ பேரரசு நிறுவப்பட்டது தென்னிந்தியாவின் நிர்வாக நிறுவனக் கட்டமைப்புகளை மாற்றியது
அ) பாமினி ஆ) விஜயநகர் இ) மொகலாயர் ஈ) நாயக்கர்

5) பசிபிக் பெருங்கடல் என பெயரிட்டவர் ______
அ) கொலம்பஸ் ஆ) அமெரிகோவெஸ்புகி
இ) ஃபெர்டினான்ட் மெகல்லன் ஈ) வாஸ்கோடகாமா

6) பாறைகளின் சிதைவுறுதலும் அரித்தலும் ______ என்று அழைக்கப்படுகிறது
அ) வானிலைச்சிதைவு ஆ) அரித்தல் இ) கடத்துதல் ஈ) படியவைத்தல்

7) பருவக்காற்று என்பது ______
அ) நிலவும் காற்று ஆ) காலமுறைக் காற்றுகள்
இ) தலக்காற்று ஈ) மேற்கண்ட எதுவுமில்லை

8) மக்கள்தொகை புள்ளி விவரக்கல்வி ______ ஆகும்
அ) மக்கள்தொகையியல் ஆ) புறவடிவமைப்பியல்
இ) சொல்பிறப்பியல் ஈ) நிலநடுக்க வரைவியல்

9) உலக அமைவிடத்தை கண்டறியும் தொழில்நுட்பம் (GPS) பயன்படுத்தப்படும் செயற்கைக்கோள்கள்
அ) 7 ஆ) 24 இ) 32 ஈ) 64

10) கூற்று (A): இந்தியாவில் அதிக எண்ணிக்கையிலான அழுத்தக்குழுக்கள் காணப்படுகின்றன
காரணம் (R): அமெரிக்க ஐக்கிய நாட்டில் இருப்பதைப் போல இந்தியாவில் அழுத்தக் குழுக்கள் வளர்ச்சி அடையவில்லை
அ) A மற்றும் R இரண்டும் சரியானது மற்றும் (R), Aவை விளக்குகிறது
ஆ) A மற்றும் R இரண்டும் சரியானது மற்றும் (R), Aவை விளக்கவில்லை
இ) A சரியானது மற்றும் R தவறானது
ஈ) A தவறானது மற்றும் R சரியானது

11) ______ க்கான நோபெல் பரிசு கைலாஷ் சத்தியார்த்தி மற்றும் மலாலாவிற்கு கொடுக்கப்பட்டது
அ) இலக்கியம் ஆ) அமைதி இ) இயற்பியல் ஈ) பொருளாதாரம்

12) ஊராட்சிகளின் ஆய்வாளராகச் செயல்படுகின்றவர் ______ ஆவார்
அ) ஆணையர் ஆ) மாவட்ட ஆட்சியர் இ) பகுதி உறுப்பினர் ஈ) மாநகரத் தலைவர்

13) ______ துறை பதிவு செய்யப்பட்டு மற்றும் அரசு விதிகளை பின்பற்றுகிறது
அ) வேளாண்மை ஆ) ஒழுங்கமைக்கப்பட்ட
இ) ஒழுங்கமைக்கப்படாத ஈ) தனியார்

14) சர்வதேச வணிகத்தில் பயன்படுத்தப்படும் நாணய முறை ______
அ) அமெரிக்க டாலர் ஆ) பவுண்டு இ) யென் ஈ) ரூபாய்

### பகுதி - II

10×2=20

ஏதேனும் பத்து வினாக்களுக்கு மட்டும் விடையளி. (வினா எண். 28 கட்டாய வினா)

15) அயல்நாடுகளுடனான தொடர்பு பழங்காலத் தமிழகத்திற்கு பெருமை சேர்த்தது. இத்தகைய சான்றுகளுடன் இக்கூற்றை நிறுவுக.

16) மும்மணிகள் - இச்சொல்லை விளக்கிக் கூறு.

17) குறிப்பு வரைக: சீனப்பெருஞ்சுவர்

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com

www.Padasalai.Net www.Trb Tnpsc.Com



18) விஜயநகர அரசை உருவாக்கியது யார்? அவ்வரசை ஆண்ட வம்சாவளிகளின் பெயர்களைக் குறிப்பிடு.
19) பிரெஞ்சு புரட்சியின் போது விவசாயிகள் செலுத்த வேண்டிய வரிகள் யாவை?
20) வானிலைச் சிதைவு - வரையறு
21) காலநிலையைப் பாதிக்கும் காரணிகள் யாவை?
22) உயிரினப் பன்மை இழப்பு என்பதன் பொருள் கூறு.
23) நில வரைபடத்தின் கூறுகள் யாவை?
24) குழந்தைகளுக்குச் சிறப்பு கவனம் தேவைப்படுவது ஏன்?
25) இந்தியாவிலுள்ள தேர்தல் முறை பற்றி விவரி?
26) கிராம ஊராட்சிகளால் விதிக்கப்படும் வரிகள் யாவை?
27) பொருளாதார மேம்பாட்டின் குறியீடுகள் யாவை?
28) பொருளாதாரத்தில் தொழிலாளர் சக்தி என்றால் என்ன?

## பகுதி - III

ஏதேனும் பத்து வினாக்களுக்கு விடையளி.(வினா எண்.42 கட்டாய வினா) **10×5=50**

29) கோடிட்ட இடத்தை நிரப்புக.
   1) கி.பி. 1453ல் கான்ஸ்டான்டி நோபிளை ________ கைப்பற்றினர்.
   2) பாலைவனப் பல்லுயிர் தொகுதிகளில் வளரும் தாவரங்கள் ________ ஆகும்
   3) உலகளாவிய மனித உரிமை பிரகடனம் ________ பிரிவுகளைக் கொண்டுள்ளது.
   4) தமிழகத்தின் மொத்த புவியியல் பரப்பு ________ ஹெக்டேர்கள்
   5) இந்திய ரிசர்வ் வங்கியின் முதல் அச்சகம் தொடங்கப்பட்ட இடம் ________
30) அ) வேறுபடுத்துக:- 1. சவானா - தூந்திரா 2. டெல்டா - ஓதபொங்குமுகம்
   ஆ) காரணம் கூறு:- புவியியல் வல்லுநர்களின் அடிப்படைக் கருவி நிலவரைபடம்
31) தத்துவம், இலக்கியம் ஆகிய துறைகளில் சீனத்தின் தாக்கம் எந்தளவிலானது என்பதைக் கூறு
32) ஏதென்ஸின் எழுச்சி வளர்ச்சி ஆகியவற்றையும் அதன் சிறப்புமிக்க கொடைகளையும் சுட்டிக் காட்டுக.
33) புவியியல்சார் கண்டுபிடிப்புகளின் விளைவுகள் குறித்து ஆராய்க
34) பொழிவின் வகைகளை விவரி
35) மக்கள்தொகைப் பரவலைப் பாதிக்கும் காரணிகள் யாவை?
36) உலக அமைவிடத் தொகுதியின் (GPS) பயன்களை விவரி?
37) மக்களாட்சியில் உள்ள சவால்கள் யாவை?
38) உள்ளாட்சி அமைப்புகள் எதிர்கொள்ளும் முக்கிய சிக்கல்கள் மற்றும் சவால்கள் யாவை?
39) விவரி:- அ) முதன்மைத்துறை ஆ) இரண்டாம் துறை இ) சார்புத்துறை
40) இந்திய ரிசர்வ் வங்கியின் பணிகளை விவரி?
41) கி.பி.1480 முதல் 1530 வரையிலான ஆண்டுகளுக்கு காலக்கோடு வரைந்து ஏதேனும் 5 முக்கிய நிகழ்வுகளைக் குறிக்க
42) பின்வருவனவற்றை உலகப்படத்தில் குறி:
   1. அரேபியா 2. கிரீஸ் 3. சீனா
   4. நன்னம்பிக்கை முனை 5. கொலம்பஸின் கடல்வழி

## பகுதி - IV

அனைத்து வினாக்களுக்கும் விடையளி:- **2×8=16**

43) 1789 ஆம் ஆண்டு புரட்சிக்குப் பிரெஞ்சு தத்துவஞானிகளின் பங்களிப்பினை விளக்கவும்.
   (அல்லது)
   புவி அமைப்பை விவரி?
44) கீழ்க்கண்டவற்றை உலகப்படத்தில் குறிக்க.
   1) தென்பெருங்கடல் 2) ஏதேனும் ஒரு புவி அதிர்ச்சி மண்டலம்
   3) ஏதேனும் ஒரு கண்ணாம்பு பாறை பிரதேசம் 4) டான்ஸ் 5) பிளவுபள்ளத்தாக்கு
   6) ஏதேனும் ஒரு டெல்டா 7) அலாஸ்கா நீரோட்டம் 8) தூந்திரக்காடுகள் (அல்லது)
   1) அண்டார்டிகா 2) பசிபிக் நெருப்பு வளையம் 3) இமயமலை
   4) ஏதேனும் ஒரு பாலைவனம் 5) ஏதேனும் ஒரு செயல்படும் எரிமலை 6) பிரெய்ரி
   7) நிலநடுக்கோட்டு காடுகள் 8) பெரு நீரோட்டம்

********

Scanned with CamScanner
Kindly Send Me Your Key Answer to Our email id - Padasalai.net@gmail.com